**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6**

**ந.க.எண். 3195/ஆ7/கலை/ஒபக/2022, நாள். 22.12.2022**

-----

**பொருள்** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி- கல்வி சாரா செயல்பாடுகள் – 2022 - 2023 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் கலைத்திரு விழா மாநில அளவிலான போட்டிகள் நடத்துதல் – தொடர்பாக.

**பார்வை**

1. 2022 . 2023 ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத் தொடரில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு
2. இவ்வலுவலக செயல்முறைகள் இதே எண் நாள் 21.09.2022 11.11.2022, 02.11.2022 மற்றும் 16.12.2022

*****

2022-2023 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் 27.12.2022 முதல் 30.12.2022 வரை கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறவுள்ளது.

| வகுப்பு | போட்டிகள் நடைபெறும் மாவட்டம் | போட்டிகள் | பொறுப்புஅலுவலர்கள் |
|---|---|---|---|
| 6-8 | மதுரை | அனைத்து வகைப் போட்டிகள் | திரு. எஸ். சுந்தராமன்<br>ஆலோசகர் |
| 9-10 | கோயம்புத்தூர் | அனைத்து வகைப் போட்டிகள் | முனைவர் இரா.பாஸ்கரசேதுபதி<br>இணை இயக்குநர் |
| 11-12 | திருவள்ளூர் | வகை 1. காண்கலை / நுண்கலை,<br>வகை 8. நாடகம்,<br>வகை 9. மொழித்திறன் | திரு. ஆர். எத்திராஜீலு<br>ஆலோசகர் |
| | காஞ்சிபுரம் | வகை 2. இசை-வாய்ப்பாட்டு<br>வகை 3. கருவிஇசை – தோற்கருவி<br>வகை 4. கருவிஇசை – துளை/ காற்றுக்கருவி<br>வகை 5. கருவிஇசை- தந்திக்கருவி<br>வகை 6. இசைச் - சங்கமம் | திரு.ஆர். புண்ணியகோட்டி ,<br>மாவட்டக் கல்வி அலுவலர் |
| | செங்கல்பட்டு | வகை 7. நடனம் | திரு. எஸ். ஜனார்தனன்<br>ஆலோசகர் |

மாவட்ட அளவில் மூன்று பிரிவுகளில் பல்வேறு போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களை 38 மாவட்டங்களிலிருந்து மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்றிட பொறுப்பு ஆசிரியர் துணையுடன் பாதுகாப்போடு சார்ந்த மாவட்டங்களுக்கு அழைத்து வரவும் மற்றும் சென்னையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்கு அழைத்து வருவதற்கான போக்குவரத்து செலவினங்களை LEP (தொடக்க நிலை) தலைப்பின்கீழ் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது. இதற்காக ஒரு மாவட்டத்திற்கு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் ஒதுக்கீடு செய்து அனுப்பப்பட்டுள்ளன.

மாநில அளவில் நடைபெறும் கலைத்திருவிழாவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 2023 ஜனவரி மாதம் 12 தேதியன்று சென்னையில் நேரு உள்விளையாட்டு அரங்கில் பரிசுகளும், சான்றிதழ்களும் மற்றும் கலையரசன், கலையரசி என்ற விருதுகளும் வழங்கப்படவுள்ளது.

மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டியின் வகை, போட்டி நடைபெறும் இடம், நாள், நேரம் , தங்கும் வசதி, தொடர்பு அலுவலர்களின் பெயர், தொலைபேசி எண் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டங்களில் மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களை மாநில அளவிலான போட்டிகள் நடைபெறும் இடத்திற்கு ஒருங்கிணைத்து கீழ்க்காணும் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி பொறுப்பு ஆசிரியர்களுடன் தகுந்த பாதுகாப்புடன் அனுப்பி வைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

1. மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மாணவ / மாணவிகளை போட்டி தொடங்கும் நாளுக்கு முந்தைய நாள் மாலை 6 மணிக்குள்ளாக மாணவ / மாணவியருக்கு தங்கும் வசதி செய்யப்பட்டுள்ள மையத்திற்கு தேவையான உடைமைகளுடன் பொறுப்பாசிரியர் மேற்பார்வையில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. கலைத் திருவிழா போட்டிகள் நடைபெறும் மையங்களுக்கு மாவட்டங்களிலிருந்து தனித்தனியே பொறுப்பாளர் ஒருவர் (ஆசிரியர் / அலுவலர்) ஒருங்கிணைப்பாளராக

செயல்பட்டு மாநில அளவிலான போட்டிகள் நடைபெறும் 5 மாவட்ட பொறுப்பு அலுவலர்களுடன் கலந்து பேசி செயல்படுமாறு தெரிவிக்கப்படுகிறது.

3. போட்டிகளில் பங்குபெறும் மாணவர்களின் பயணத்திட்டத்தை 23.12.2022 பிற்பகலுக்குள் முன்கூட்டியே போட்டிகள் நடைபெறும் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட / மைய பொறுப்பு அலுவலர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.
4. போட்டிகளில் பங்கு பெறும் மாணவர்கள் மையத்தில் தங்குவதற்கு ஏதுவாக போர்வை- 1, உணவு தட்டு – 1 , டம்ளர் – 1, water bottle மற்றும் தேவைப்படும் மருந்து பொருட்கள் பயன்படுத்துவோர் உடன் அவசியம் கொண்டு வருதல் வேண்டும்.
5. விலை உயர்ந்த ஆபரணங்கள் மற்றும் பொருட்களை உடன் எடுத்து வருவதை தவிர்த்தல் வேண்டும்.
6. போட்டிகளுக்கு தேவையான ஒப்பனை பொருட்கள், தேவையான கருவிகள், ஆடைகள் மற்றும் படைப்புகள் சார்ந்த பதிவுகள் (pendrive) ஆகியவை எடுத்து வருவது போட்டியில் பங்குபெறுவோரின் பொறுப்பாகும்.
7. ஒவ்வொரு போட்டியாளரும் போட்டியில் கலந்துக் கொள்ளும் மையங்களுக்கு காலை 9 மணிக்குள் வருகை புரிந்து தனது பதிவினை முடித்தல் அவசியம்,.
8. பதிவின் போது இரவு தங்கும் வசதி தேவைப்படின் அதனை உறுதி செய்தல் வேண்டும்.
9. ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் விவரங்களை போட்டி நடைபெறும் மையத்திற்கு முன்னதாகவே தெரிவித்தல் வேண்டும்.
10. போட்டிகள் முடிந்தவுடன் போட்டி நடைபெற்ற மையத்தை விட்டு வெளியேறி மாணவர்கள் பொறுப்பாசிரியருடன் தங்கள் மாவட்டத்திற்கு பாதுகாப்பாக திரும்ப பயணம் மேற்கொள்ள வேண்டும்.
11. பொறுப்பு ஆசிரியர்களை (ஆண் / பெண்) போட்டி நடைபெறும் மையங்களுக்கு போட்டிகளில் பங்குபெறும் மாணவ / மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அனுப்புதல் வேண்டும். குறிப்பாக மாணவிகளை பாதுகாப்பாக அழைத்து வர உரிய எண்ணிக்கையின் அடிப்படையில் பெண் பொறுப்பு ஆசிரியர்கள் மட்டுமே உடன் வருதல் வேண்டும்.

12. பொறுப்பு ஆசிரியர்கள் மற்றும் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் மட்டுமே போட்டி நடைபெறும் மையங்களுக்குள் அனுமதிக்கப்படுவார்கள். பெற்றோர் / மற்றவர்களுக்கு அனுமதி கிடையாது.

13. பயணத்தின் போதும், போட்டி நடைபெறும் மையங்களில் உள்ள போதும் வெளி நபர்களிடமிருந்து உணவு வாங்குவது மற்றும் உண்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

மாநிலத் திட்ட இயக்குநருக்காக

இணைப்பு

22/12/2022

1. 6 முதல் 8 வகுப்பு வரை மாணவர்களுக்கு
   மதுரை மாவட்டத்தில் நடைபெறும் போட்டிகள்
   குறித்த இடம், நாள் வகை விவரம்
2. 9 மற்றும் 10 வகுப்பு வரை மாணவர்களுக்கு
   கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெறும் போட்டிகள்
   குறித்த இடம், நாள், வகை விவரம்
3. 11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களுக்கு செங்கல்பட்டு,
   காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் நடைபெறும்
   போட்டிகள் குறித்த இடம், நாள், வகை விவரம்.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்**

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை 6
2. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை 6